**OS No.87/2015**

PW 1 – ஜெயப்பிரியா

நாள் 16.10.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நீதிமன்ற ஆணையாளரின் முதல் நிலை அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்ற ஆணையாளரின் இறுதி நிலை அறிக்கை நீ.ம.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நீதிமன்ற ஆணையாளர் வரைபடம் நீ.ம.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் 2 ம் வாதி செந்தில்குமாரின் மனைவி. 1 ம் வாதி ராஜசேகரனை பின்னிட்டு விசாரணை செய்யவுள்ளோம். நான் 2 ம் இலக்கசொத்தைப் பொறுத்து சாட்சியம் அளிக்கிறேன். 2 ம் இலக்க சொத்து என் கணவர் செந்தில்குமாருக்கு பாத்தியம் என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2 ம் இலக்க சொத்தைப் பொறுத்து என் கணவருக்கு பாத்தியம் என்பதை காண்பிக்க நத்தம் பட்டா மட்டும் உள்ளது. உரிமை மாற்று ஆவணங்கள் என்னிடம் கிடையாது. தாவா 2 ம் இலக்க சொத்தில் பிரதிவாதிகளின் சொத்து 2 அடி உள்ளே இருப்பதாக ஆட்சேபணை செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

நீதிமன்ற ஆணையர் இரண்டு முறை தாவா சொத்தைப் பார்த்த போது நான் தாவா இடத்தில் இல்லை. புதிய நீதிமன்ற ஆணையரை நியமனம் கோரியும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கையையும், வரைபடத்தை ரத்து செய்யக்கோரியும் மனு தாக்கல்

செய்திருந்தோம் அந்த மனு இரு தரப்பு விசாணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்ட்டது என்றால் சரிதான்.

மேற்படி உத்தரவின் மீது மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைகிளையில் சீராய்வு மனு தாக்கல்செய்திருந்தோம். அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டு கீழமை நீதிமன்ற உத்தரவு ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**( குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதிகள் தரப்பில் வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்பட்டது )**

–Sd–

Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.